

ஒரு சிறிய நெல்லிக்காயில் அபரிமிதமாக வைட்டமின் சி அடங்கியுள்ளது. ஆரஞ்சு, கொய்யா, பப்பாளி, மாம்பழம் போன்றவற்றில் இது இருந்தாலும் நெல்லியில்தான் அதிகம் உள்ளது. எனவே, நெல்லிக்காய் சாப்பிடுவது நல்லது.

---



தமிழ்நாடு அரசு நன்னீர்த்தேக்கம் ஏற்படுத்துவதாக அறிவித்துள்ள நெம்மேலி சதுப்புநிலத்தில் சென்னையிலேயே முதன்முறையாக Demoiselle Crane எனும் நெட்டைப் பெருங்கொக்கு வந்துள்ளது. எனவே, நீர்த்தேக்கத் திட்டத்தை கைவிடக் கோரிக்கை எழுந்துள்ளது.

---

பாம்பு ஆராய்ச்சியாளர் ரோமுலஸ் விட்டேகரும் பிரபல எழுத்தாளர் ஸாய் விட்டேகரும் இணைந்து இளம் வாசகர்களுக்காக The Book of Indian Snakes என்கிற புதிய புத்தகத்தை எழுதியுள்ளனர்.



KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# ரூ.13,077 கோடியில் புதிய மின் திட்டம்

## முதல் அலகில் மின்சார உற்பத்தியையும் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

**தூத்துக்குடி**

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் ரூ.13,077 கோடியில் அமைக்கப்பட்டுள்ள அனல்மின் நிலையத்தில் மின் உற்பத்தியை முதல்வர் ஸ்டாலின் நேற்று காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார். இன்னும் 2 அல்லது 3 மாதங்களில் 2-வது அலகும் மின் உற்பத்தியை தொடங்கி, இரு அலகுகளும் முழு திறனில் செயல்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம் சார்பில், தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் ரூ.13,077 கோடி செலவில் தலா 660 மெகாவாட் மின் உற்பத்தி திறனுடன் 2 அலகுகள் கொண்ட மிக உய்ய (Super Critical) அனல்மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான கட்டுமானப் பணிகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில், கடந்த சில வாரங்களாக முதல் அலகில் சோதனை ஓட்டம் நடைபெற்று வந்தது. இந்த சோதனை ஓட்டம் வெற்றிகரமாக அமைந்து, மின் உற்பத்தி சீராக இருந்ததை தொடர்ந்து, முதல் அலகின் தொடக்க விழா நேற்று நடைபெற்றது.





சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வாயிலாக, உடன்குடி அனல்மின் நிலையத்தின் முதல் அலகை முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். தலைமைச் செயலர் நா.முருகானந்தம், மின்வாரிய நிறுவனங்களின் தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன், எரிசக்தி துறை செயலர் மங்கத் ராம் சர்மா, இயக்குநர் ஜான் டால்டன் உடன் இருந்தனர். (அடுத்த படம்) உடன்குடியில் திறந்து வைக்கப்பட்ட 660 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட அனல் மின்நிலையம்.

### முதல் அலகில் மின் உற்பத்தி

சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வாயிலாக, உடன்குடி அனல்மின் நிலையத்தின் முதல் அலகை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்து, மின் உற்பத்தியை தொடங்கி வைத்தார். தலைமைச் செயலர் நா. முருகானந்தம், மின்வாரிய நிறுவனங்களின் தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன், எரிசக்தி துறை செயலர் மங்கத் ராம் சர்மா, இயக்குநர் ஜான் டால்டன் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

உடன்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் எம்.கோவிந்த ராவ், மாவட்ட ஆட்சியர் க.இளம் பகவத், ஒட்டப்பிடாரம் எம்எல்ஏ சண்முகையா ஆகியோர் கலந்து கொண்டு, அனல்மின் நிலையம் மற்றும் நிலக்கரி இறங்குதளத்தைப் பார்வையிட்டனர்.

உடன்குடி அனல்மின் நிலையம் மிக உய்ய அழுத்த கொதிகலன் மற்றும் அதிக செயல் திறன் சுழலியுடன் (Supercritical Boiler with High Efficiency Turbine) நேர்த்தியாக கட்டப்பட்டுள்ளது.

### விரைவில் சோதனை ஓட்டம்

இந்த அனல்மின் நிலையத்தின் முதல் அலகில் மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, சில வாரங்களில் 2-வது அலகில் சோதனை ஓட்டம் தொடங்கப்பட உள்ளது. அனைத்து சோதனைகளும் முடிந்து, இன்னும் 2 அல்லது 3 மாதங்களில் 2-வது அலகும் மின் உற்பத்தியை தொடங்கி, இரு அலகுகளும் முழு திறனில் செயல்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வளாகத்தில் மேலும் 3 அலகுகள் நிறுவுவதற்கு விரைவில் விரிவாக்கப் பணிகள் தொடங்கப்பட உள்ளன. தற்போது உள்ள 2 அலகுகள் மற்றும் இனி வரவுள்ள 3 அலகுகளுக்கும் நிலக்கரி கொண்டு வர பிரத்யேக கப்பல் தளமும், மூடிய கன்வேயர் அமைப்பும் கட்டப்பட்டுள்ளன.

### நடுக்கடலில் கப்பல் தளம்

ஒரே நேரத்தில் 2 அதி கொள்ளளவு கப்பல்களைக் கையாளும் விதத்தில், கரையில் இருந்து 9 கி.மீ தொலைவில் நடுக்கடலில் நிலக்கரி கப்பல் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தளத்தில் 2 அதிவேக நிலக்கரி கையாளும் இயந்திரங்கள் உள்ளன. சுற்றுப்புறச்சூழலுக்கு எவ்வித பாதிப்புமின்றி கப்பல் தளத்தில் இருந்து 9 கி.மீ. மூடிய கன்வேயர் பெல்ட் வழியாக அனல் மின் நிலையத்துக்கு, நிலக்கரி கொண்டு வரப்படுகிறது.

அதுமட்டுமின்றி, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக உடன்குடி மின்திட்ட வளாகத்தில் 1.50 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் தொடங்கப்பட்டு, இதுவரை 52 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.


கூடுதல் நிலக்கரியை சேமிக்க 6.80 லட்சம் டன் கொள்ளளவு கொண்ட திறந்த மற்றும் மூடிய நிலக்கரி தளங்கள் உள்ளன. இந்த மின்நிலையத்தின் தேவைகளுக்காக, கடல் நீரில் இருந்து நன்னீர் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் உள்ளன. மின் நிலையத்தின் நன்னீர் தேவை அனைத்தும் கடல்நீர் சுத்திகரிப்பான் வழியாகவே பெறப்படுகிறது. இங்கு உற்பத்தி ஆகும் சாம்பலைச் சேகரித்து, சிமென்ட் ஆலைகள் மற்றும் செங்கல் தயாரிப்பாளர்களுக்கு அளிக்க 4 சாம்பல் குதிர்கள் உள்ளன. இங்குள்ள ஆயிரக்கணக்கான உபகரணங்களைக் கையாள உலகத் தரத்தில் கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது. கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில் தமிழகத்தின் மின் தேவையை பூர்த்தி செய்வதில் உடன்குடி அனல்மின் நிலையம் முக்கிய பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்தியாவில் எல்பிஜி உற்பத்தி 30 சதவீதம் அதிகரிப்பு

## மக்கள் பீதி அடைய வேண்டாம் என மத்திய அரசு அறிவிப்பு

**புதுடெல்லி**

எல்பிஜி சிலிண்டர்கள் உற்பத்தி



செயலிழந்தது. இதையடுத்து

செய்து வருகின்றனர்.

**பொது அறிவு:** இந்தியத் திட்டக் குழுவின் (Planning Commission) தலைவராக இந்தியப் பிரதமர் பதவி வகித்தார். 1950 முதல் செயல்பட்டு வந்த இந்தக் குழு 2014-ல் கலைக்கப்பட்டு, தற்போது அதற்குப் பதிலாக 'நிதி ஆயோக்' (NITI Aayog) என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது.

# மாநில தகவல் ஆணையராக விஜயராம் நியமனம்

## ஆளுநர் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்

**சென்னை**

மாநில தகவல் ஆணையராக நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்ற மதுரை கிளை முன்னாள் துணை பதிவாளர் வி.விஜய ராமுக்கு, ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் செயல்படும் மாநில தகவல் ஆணையத்தின் உறுப்பினர்கள் 6 பேர் என இருந்த நிலையில், அதன் எண்ணிக்கை 8 ஆக சமீபத்தில் உயர்த்தப்பட்டது. இதையடுத்து, காலியாக இருந்த 3 இடங்களில் 2 இடங்களுக்கு சமீபத்தில் ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி அதுல்ய மிஸ்ரா, ஓய்வுபெற்ற ஐபிஎஸ் அதிகாரி அபய்குமார் சிங் ஆகியோர் அரசால் பரிந்துரைக்கப்பட்டு, ஆளுநர் ஆர்.என்.ரவியால் நியமிக்கப்பட்டனர். இருவரும் மார்ச் 6-ம் தேதி ஆளுநர் மாளிகையில் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

இந்நிலையில், காலியாக இருந்த ஒரு தகவல் ஆணையர் இடத்துக்கு, உயர் நீதிமன்ற மதுரை கிளையில் துணை பதிவாளராக இருந்து ஓய்வு பெற்ற ஏ.விஜயராம் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு பொறுப்பு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில், தலைமை தகவல் ஆணையர் ஷகீல் அக்தர் மற்றும் தாமரைக் கண்ணன் உள்ளிட்ட ஆணையர்கள், ஆளுநரின் செயலர் ஆர்.கிர்லோஷ் குமார், மனிதவள மேலாண்மைத் துறை செயலர் சி.சமயமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

CHENNAI



**பெரியபுராணம் இயற்றிய சேக்கிழார், தாம் பிறந்த குன்றத்தூரில் திருநாகேஸ்வரத்தை முன்மாதிரியாகக் கொண்டு கோயில் கட்டினார். ராகுத் தலமாகப் போற்றப்படும் இக்கோயில், சோழர் காலக் கட்டிடக் கலைக்கும், சேக்கிழாரின் சிவபக்திக்கும் சான்றாக விளங்குகிறது.**

# தமிழ்நாட்டை சேர்ந்த 19 வயது இளைஞருக்கு டைட்டானியத்தில் மண்டை ஓடு மறுகட்டமைப்பு

## கிம்ஸ் ஹெல்த்தில் உயிர் காக்கும் அறுவை சிகிச்சை

CHENNAI



**கவிஞர் வாணிதாசன் எழுதிய 'கொடிமுல்லை' காவியம் 1950இல் வெளியானது. இவர் பாவேந்தரின் பரம்பரை கவிஞர்களில் ஒருவர் ஆவார். இக்காவியம் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் உருவாக்கப்படுவதை இலக்காகக் கொண்டது.**

கவிஞர் முடியரசன் எழுதிய 'பூங்கொடி' காவியம் 1964இல் வெளியானது. பாவேந்தரின் வழிதோன்றல் கவிஞரான இவரது இக்காவியம், மணிமேகலை காப்பியத்தைத் தழுவி தமிழ்ப்பற்றையும் சுதந்திர உணர்வையும் மையப்படுத்தி இயற்றப்பட்டது.



CHENNAI



பொது அறிவு : குளிர் காலத்தில்தான் நம் உடலுக்கு அதிக கொழுப்பு தேவைப்படுகிறது. குளிரிலிருந்து உடலை வெப்பமாக வைத்துக்கொள்ளவும், உடலுக்குத் தேவையான ஆற்றலை வழங்கவும், தோல் வறட்சியைத் தடுக்கவும் கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகள் அதிகம் தேவைப்படுகின்றன.

### தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி நீக்க தீர்மானம்

# நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் நோட்டீஸ்

■ புதுடெல்லி

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானத்துக்கான நோட்டீஸை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் நேற்று சமர்ப்பித்தன.

கடந்த ஆண்டு பிப்ரவரி 19-ம் தேதி தலைமைத் தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமார் பதவியேற்றார். இதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு பிஹாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து தமிழ்நாடு, மேற்குவங்கம், குஜராத், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட 12 மாநிலங்களில் அண்மையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்ஐஆர்) நடைபெற்றது. இந்த மாநிலங்களில் லட்சக்கணக்கான வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். இதற்கு காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

எஸ்ஐஆர் மூலம் வாக்கு திருட்டு நடைபெறுவதாகவும், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பாஜகவுக்கு ஆதரவாக செயல்படுவதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன. இந்த விவகாரம் தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையரை பதவி நீக்கக் செய்யக் கோரும் தீர்மானத்துக்கான நோட்டீஸை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் நேற்று சமர்ப்பித்தன. இந்த நோட்டீஸில் மக்களவையின் 130 எம்பிக்கள், மாநிலங்களவையின் 63 எம்பிக்கள் என மொத்தம் 193 எம்பிக்கள் கையெழுத்திட்டு உள்ளனர்.



ஞானேஷ் குமார்

பத்து பக்கங்கள் கொண்ட நோட்டீஸில் ஞானேஷ்குமார் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு உள்ளன. இதுகுறித்து சட்ட நிபுணர்கள் கூறியதாவது:

கடந்த 1990-களில் டி.என் .சேஷன் மற்றும் 2006-ல் நவீன் சாவ்லா ஆகியோரை பதவி நீக்கம் செய்யக் கோரி விவாதங்கள் எழுந்தன. ஆனால் அவர்களுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்படவில்லை. இந்திய தேர்தல் வரலாற்றில் முதல்முறையாக தற்போதைய தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக நோட்டீஸ் வழங்கப்பட்டு உள்ளது.

இந்த நோட்டீஸை மக்களவை சபாநாயகரிடம் சமர்ப்பிக்க குறைந்தபட்சம் 100 எம்பிக்கள் கையெழுத்திட வேண்டும். தற்போது வழங்கப்பட்டிருக்கும் நோட்டீஸில் 130 எம்பிக்கள் கையெழுத்திட்டு உள்ளனர். இதேபோல மாநிலங்களவை தலைவரிடம் நோட்டீஸை சமர்ப்பிக்க 50 எம்பிக்கள் கையெழுத்திட வேண்டும். இதன்படி 63 எம்பிக்கள் நோட்டீஸில் கையெழுத்திட்டு உள்ளனர்.

இரு அவைகளிலும் நோட்டீஸ் ஏற்கப்பட்டால் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதி, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி, மூத்த சட்ட நிபுணர் அடங்கிய சிறப்புக் குழு அமைக்கப்படும். இந்த குழு அனைத்து தரப்பினரிடமும் விசாரணை நடத்தும்.

தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு முகாந்திரம் இருப்பதாக சிறப்புக் குழு கருதினால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தீர்மானம் கொண்டு வர அனுமதி வழங்கப்படும். இதை நிறைவேற்ற மூன்றில் இரு பங்கு எம்பிக்களின் ஆதரவு தேவை. ஒருவேளை தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு முகாந்திரம் இல்லை என்று சிறப்பு குழு தீர்மானித்தால், நோட்டீஸ் ரத்து செய்யப்படும். நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்படாது.

இவ்வாறு சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.